உடனடிப் பிரசுரத்திற்காக

# தலைசிறந்த 10 இளம் சாதனையாளர்களுக்கான விருதுகள் (TOYP) 2011 – இப்போது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

ஜுனியர் சேம்பர் இன்டர்நஷனல் ஸ்ரீலங்காவி னால் (JCI Sri Lanka) வருடாவருடம் ஒழுங்கு செய்யப்படும் 10 இளம் சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சியை (TOYP) 2011 முப்பத்தி ஓராவது வருடமாக இடம்பெறவிருக்கிறது. இந்த நிகழ்வில், தனிப்பட்ட முறையில் அல்லது தொழில்சார்ந்த துறைகளில் அதிசிறந்த சாதனைப்புரிந்த 10 இளைஞர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட இருக்கிறார்கள். TOYP விருதினைப் பெறுபவர்களுக்கு இளம் செயற்படு பிரஜைகளின் உலகளாவிய அமைப்பினூடாக சர்வதேச நன்மதிப்பும் கிடைக்கும்.

இவ் வேலைத்திட்டம் 1980 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அப்போதிலிருந்து இலங்கையில் இளைஞர்களின் திறமைகளையும் சாதனைகளையும் இனங்கண்டு பாராட்டுவதில் JCI Sri Lanka சந்தேகத்திற்கிடமின்றி முன்னணி வகித்து வருகின்றது.

"இலங்கையைச் சேர்ந்த இளம் சாதனையாளர்களைக் கௌரவிக்கும் 2011 ஆம் ஆண்டின் TOYP தேசிய விருதிற்கான நியமனங்கள் தற்போது ஏற்றுக்காள்ளப்படுகின்றன." என்று JCI Sri Lanka அமைப்பின் தேசிய தலைவர் Jiffrey Zulfer தெரிவித்தார். "எமது சமூகங்களிலும் நாட்டிலும் உள்ள இளம் திறமைசாலிகளைக் கௌரவிக்க நாம் விரும்புகிறோம்" 18 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் இந்த விருதுக்காக விண்ணப்பிக்கலாம். தத்தமது துறைகளில் முன்மாதிரியாகச் செயற்பட்டு, வருங்காலத்தில் திறமைமிக்க தலைவர்களாகப் பிரகாசிக்க இருப்பவர்களை இனங்காண இது எமக்கு ஒரு சிறந்த வாய்ப்பாகும்." இவர்களைக் கௌரவிப்பதன் மூலம் இவர்களும் ஏனையயோரும் தத்தமது துறைகளில் உன்னத நிலையை அடைந்து பிறருக்குச் சேவை செய்வதை ஊக்குவிப்பதே JCI அமைப்பின் நோக்கமாகும். சிறந்த சமூகங்களையும் உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்ய JCI கையாளும் ஒரு வழிமுறை இதுவாகும்." என்றும் Jiffrey Zulfer குறிப்பிட்டார்.

விருதுக்காக விண்ணப்பிக்க விரும்புவோர் தமக்குரிய பிரவேசக் கூப்பன்களை ஜுன் மாதம் 8ம் திகதியிலிருந்து பிரசுரமாகும் தமிழ், சிங்கள, ஆங்கில தினசரி மற்றும் வார இறுதிப்பத்திரிகைகளில் இருந்து பெற முடியும். நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் வேலைத்திட்டத்தலைவர், TOYP 2011 செயலகம், 185-1, தர்மபால மாவத்தை, கொழும்பு 7 என்ற முகவரிக்கு 2011 ஜுலை 29க்கு கிடைக்கத்தக்கவாறு அனுப்பப்பட வேண்டும்.

TOYP 2011 விருதுக்கான விண்ணப்பப் படிவத்தை www.jcisl.org என்ற இணையத்தளத்திலும் பெற முடியும்.. TOYP விருதுக்கான தேர்வு நடைமுறை மிகவும் கடினமானது. சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள்யாவும் விசேடமாக நியமிக்கப்பட்ட கண்காணிப்பாளர்களின் முன்னிலையில், தேர்ச்சிபெற்ற நடுவர்கள் குழுவினால் பரிசீலனை செய்யப்படும். ஜேசீஸ் சாசனத்தின் கோட்பாடுகளுக்கு அமைவான முறையிலும் மற்றறையோருக்கு ஊக்கத்தை தூண்டக்கூடிய விதத்திலும் புரியப்பட்ட விசேட சாதனைகளின் அடிப்படையிலேயே விருதுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

1. வியாபாரம், பொருளாதாரம் அல்லது தொழில் முயற்சிச் சாதனை
2. அரசியல், சட்டம் அல்லது ஆட்சிமுறை விவகாரங்கள்
3. கல்வித் தலைமைத்துவம் அல்லது தொடர்புடைய சாதனைகள்
4. கலாசாரச் சாதனைகள்
5. ஒழுக்கநெறி அல்லது சுற்றாடல் துறைகளில் தலைமைத்துவம்
6. சிறுவர் நலன், உலக சமாதானம் அல்லது மனித உரிமைகளுக்கான பங்களிப்பு
7. மனிதநேய அல்லது சுயேச்சையான தொண்டுச் சேவைகள்
8. விஞ்ஞான அல்லது தொழில்நுட்ப அபிவிருத்தி
9. தனிநபர் முன்னேற்றம் அல்லது சாதனைகள்
10. மருத்துவ கண்டுபிடிப்பு

JCI என்பது சொந்த வாழ்க்கையிலும் உலகிலும் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்குத் தம்மை அர்ப்பணித்துள்ள 18 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட இளம் செயற்படு பிரஜைகளின் உலகலாவிய அமைப்பாகும். JCIயின் சர்வதேச வலையமைப்பில் 115க்கு மேற்பட்ட நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ஜீனியர் சேம்பர் இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா என்பது உலகின் மிகப்பெரிய இளைஞர் தலைமைத்துவ அமைப்பான ஜீனியர் சேம்பர் இன்டர்நஷனலின் இலங்கைக் கிளையாகும். சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தும் விதத்தில் இளைஞர்களுக்கு வலுவூட்டக்கூடிய புதிய அபிவிருத்தி வாய்ப்புக்களை வழங்குவதே JCI அமைப்பின் குறிக்கோளாகும். 1954ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டு, ஐக்கிய அமெரிக்காவின் மசூரி மாநிலத்திலுள்ள செஸ்டர் ஃபீல்டில் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள இந்த அமைப்பு சர்வதேச ஜேசீஸ் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. "சிறந்து விளங்குங்கள்" **(Be Better)** என்பது இதன் சுலோகமாகும். சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் சிறந்த சாதனை புரிந்தவர்களை இனங்கண்டு பாராட்டுதல் தனது கடமையென JCI கருதுகின்றது.

இலங்கையின் தலைசிறந்த 10 இளம் சாதனையாளர்களைத் தெரிவுசெய்து விருது விழங்கும் அதிகாரத்தை JCI Sri Lanka பெற்றுள்ளது. ஜீனியர் சேம்பர் இன்டர்நஷனலின் ஆதரவில் உலகின் ஏனைய நாடுகளிலுள்ள தேசிய பிரிவுகளின் ஊடாகவும் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்க ஜீனியர் சேம்பரின் தலைவராக இருந்த டேர்வூட் ஹோவ்ஸ் என்பவரே முதன்முதலாக 1930ஆம் ஆண்டில் TOYP விருதுகளுக்கான எண்ணக்கருவை உருவாக்கினார். 1933ல் இத்திட்டம் ஐக்கிய அமரிக்க ஜேசீஸ் கழகத்தினால் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1952ம் ஆண்டின் பின்னர், பல நாடுகள் தலைசிறந்த இளம் சாதனையாளர்களுக்கான தேசியத்திட்டங்களை ஆரம்பித்தன. மேலதிக விபருக்களுக்கு www.jcisl.org என்ற இணையத்தளத்தை நாடுங்கள்.